DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I,

POLLACHI

| | | |
|---|---|---|
| Calendar | CC. 389/2021 | |
| Miscellaneous | | |
| Preliminary Register | Case No. of | |
| Sessions | | |
| | Prosecution அ.சா.2 | |
| Deposition of Witnesses for | Defense | |
| | Court : | |

Name : வீராசாமி

Father's name : செல்வராஜ்

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969) on the 06th day of April 2022.

சாட்சி 'Thermal Screening' பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபின் நீதிமன்றத்திக்குள் அனுமதிக்கப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்படுகிறது. சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது,

<u>முதல் விசாரணை:</u>

நான் தற்போது கோவை, ஒண்டிபுதூரில் குடியிருந்து வருகிறேன். நான் சென்ட்ரிங் வேலையும் ஓட்டுநர் வேலையும் செய்து வருகிறேன். அ.சா.1 பிரதீப்குமார் எனக்கு தம்பி ஆவார். எனக்கு சித்தப்பா மகன் ஆவார். கடந்த 29.04.2021 அன்று அ.சா. 1 பிரதீப்குமார் அவர் தங்கியிருந்த ஷெட்டுக்கு முன்பாக நிறுத்தியிருந்த வண்டியை மறுநாள் காணவில்லை என்று எனக்கு தகவல் தெரிவித்தார். அக்கம் பக்கம்

தேடிப்பார்க்க காவல்துறையில் சொன்னதாக எனது தம்பி என்னிடம் தகவல் தெரிவிக்க நாங்கள் இருவரும் அக்கம் பக்கம் தேடிப்பார்த்தோம். வண்டி கிடைக்கவில்லை. அன்றையதினம் 30ம் நாள் ஆலந்துறை காவல் நிலையத்தில் இருந்து எனது தம்பியின் வாகனத்தை மற்றொரு வழக்கில் பிடித்திருப்பதாக தகவல் கூற அங்கு சென்று விசாரித்தபோது சம்பந்தப்பட்ட காவல் நிலையத்தில் முதலில் தகவல் தெரிவித்து எங்களது வாகனத்தை முறைப்படி பெற்றுக்கொள்ளுமாறு கூறிவிட்டனர். அதன் பின்னிட்டு நாங்கள் கிணத்துக்கடவு காவல் நிலையம் சென்றோம். அங்கே எங்கள் வாகனத்தை நீதிமன்றத்தில்தான் மனு செய்து பெற்றுக்கொள்ள முடியும் என்று கூறிவிட்டார்கள். எனது தம்பி புகார் கொடுத்தார். போலீசார் இது சம்பந்தமாக என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

அ.சா.1 பிரதீப் குமார் எனது சித்தப்பா மகன் முறை தம்பி ஆவார். அ.சா.1 பிரதீப்குமார் என்னிடம் உதவி கேட்டால் செய்வேன் என்றால் பண உதவியோ, உடல் உழைப்போ உறவினர் என்ற முறையில் செய்வேன். நானும் அ.சா.1 பிரதீப்குமாரும் மட்டும்தான் வாகனத்தை தேடினோம். சுற்றுவட்டாரத்தில் 6, 7 ஸ்டேண்டுகளிலும் ஒரு ஒயின்சாப்பிலும் வாகனத்தை தேடினோம். அ.சா.1 பிரதீப்குமார் தான் தனியாகதான் வாகனத்தை தேடியதாக கூறியுள்ளார் என்றால் நான் வருவதற்கு முன்பாக அவர் தனியாக தேடியுள்ளார். அதன் பின்னிட்டு இருவரும் இணைந்துதான் தேடினோம். ஞாயிற்றுகிழமை தவிர நான் வருடத்தில் அணைத்து நாட்களிலும் வேலை பார்த்திருப்பேன் என்றால் சரியல்ல. எனக்கு நிரந்தர பணி கிடையாததால் சென்டரிங் வேலையோ, ஓட்டுநர் வேலையோ வேலை வரும்போது செல்வேன். அதனால் அவ்வாறு கூற முடியாது. அ.சா.1 பிரதீப்குமாரின் வாகனத்தின் பதிவெண் எனக்கு ஞாபகம் இல்லை. அவர் என்னுடைய தம்பி என்ற காரணத்தினால்தான் நான் சாட்சியமளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல. வண்டி காணாமல்போனது உண்மை என்பதால் சாட்சியமளிக்க வந்துள்ளேன். யார் திருடினார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் போலீசாரின் கையிருப்பு சாட்சி என்றாலும், புள்ளி விபர கணக்கிற்காக போடப்பட்ட பொய் வழக்கில் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றாலும், அதனால்தான் என்னால் அ.சா.1 பிரதீப்குமார் எனது தம்பி என்றபோதிலும் அவரது வாகனத்தின் பதிவெண்ணை நினைவு வைத்து

கூற இயலவில்லை என்றாலும் சரியல்ல. நான் கோவையில் உள்ளதாலும், எனது தம்பி அப்போது தாமரைக்குளத்தில் இருந்ததாலும், அவரது வாகனத்தை அடிக்கடி பார்க்காததால் என்னால் அதன் பதிவெண்ணை நினைவு வைத்து கூற இயலவில்லை. 29.04.2021 அன்று இரவு வாகனத்தை நிறுத்தியதாக என்னிடம் கூறினார். அதன் கிழமை ஞாபகம் இல்லை. அந்த வண்டியை எனது தம்பி ஊரில் இருந்தபோது வாங்கியதால் அதன் தோற்றம் அமைப்பு எனக்கு சரியாக தெரியாது. அ.சா.1 என்னிடம் தகவல் தெரிவிக்க நான் ஒண்டிபுதூரில் இருந்து 24 கி.மீ தள்ளியுள்ள தாமரைக்குளம் சென்றேன். அந்த வண்டியின் புகைப்படம் என்னிடம் இல்லை. நான் அ.சா.1 பிரதீப்குமாருடன் சென்றதால் அவரது வாகனம் குறித்த தோற்றம் குறித்து தெரிந்திருக்க வேண்டிய அவசியமில்லாததாகிவிட்டது. நான் போலீசார் சொல்லிக் கொடுத்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலீசார் என்னை விசாரித்தார். கிணத்துக்கடவு போலீசாரின் பணி நிலை குறித்து எனக்கு தெரியாது. எனது போலீஸ் விசாரணை வாக்குமூலத்தில் உதவி ஆய்வாளர் என்னை விசாரித்ததாக கூறியதாக கண்டுள்ளது என்றால் எனக்கு அவர் பணி நிலை தெரியாது. நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை: இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

Sd/K.Chelliah
Judicial Magistrate No.I,
Pollachi(FAC)